( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

OS No. 353/2023

Name : Murugesan **P.W.**1
Father/Husband Name : கன்னியப்பன்
Caste :
Calling :
Religion :
Age :
Date : 12-08-2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2024

**<u>குறுக்கு விசாரணை – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்</u>**.

1. நான் தாக்கல் செய்த பிராமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் என்றால் சரிதான். நான் ஓய்வு பெற்று 5 வருடங்கள் ஆகிறது. நான் ஓய்வு பெற்றபோது எனக்கு சுமார் ரூ.7 லட்சம் ஊதியம் கிடைத்தது,. நான் தற்போது ஓய்வூதியமாக மாதம் ரூ.6 ஆயிரம் பெறுகிறேன். நான் பணி ஓய்வு பெற்ற ஆண்டியிலிருந்து ஓய்வுதியம் பெற்று வருகிறேன். இந்த ஓய்வூதியத்தில் தான் நான் உணவு மற்றும் வாழ்வாதாரத்திற்கு பயன்படுத்துகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் தான் நான் மேல்நிலை பள்ளிக்கு 14/12/2001 அன்று தானமாக எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. நான் பிராமாண வாக்குமூலத்தில் அழுத்தம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளது யார் அழுத்தம் கொடுத்தார்கள் என்றால் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் மற்ற ஆசிரியர்கள். இது குறித்து பிராமாண வாக்குமூலத்தில் மற்றும் வாதுறையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த தானத்தை நான் விருப்பத்துடன் தான் கொடுத்தேனா என்றால் அரசு அதிகாரிகள் ஒரு முறைக்கு மூன்ளுறு முறை கேட்டதால் நான் கொடுத்தேன். நான் தானம் எழுதி கொடுத்தப்போது பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் உறுப்பினராக இருந்தேனா என்றால் இல்லை. என்னை அழுத்தம் கொடுத்தது குறித்து காவல் நிலையத்தில புகார் எதாவது கொடுத்தேனா என்றால் இல்லை.

3. நான் எழுதி கொடுத்த வா.,சா.ஆ. 1 ஆவணத்தில் சொத்து விவரத்தில் Sheet போட்ட வீடு உள்ளது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தானமாக கொடுக்கப்பட்ட சொத்தில் அத்துமீறி நுழைந்து நான் எந்த விதமான கட்டிடமும் கட்டவில்லை என்றால்

சரிதான். தானமாக கொடுக்கப்பட்ட சொத்தின் நான் தான் உரிமையாளர் என்று நிரூபிக்க பட்டா சிட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- N.Anupriya, 12.08.2024.

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.